மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திடீரென்று கேட்டீர்களானால் எப்படி? அதை ஆய்வு செய்து முடிவு சொல்வார்கள்.

3. கவனஈர்ப்பு

(அ) மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவனஈர்ப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** என்று சொன்னது, ஒருவேளை தவறான ஒரு கருத்தை உருவாக்கிவிடும் என்பதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் திரு. கே. செல்வராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.

முற்பகல் 10–45

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கோயம்புத்தூர் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படும் பாதிப்பு'' குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

விவர அறிக்கை.

திருவாளர்கள் அசோசியேடட் சிமெண்ட் கம்பனீஸ் லிமிடெட், கோயம்புத்தூர் 1934-ஆம் ஆண்டு முதல் செயல் பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இத்தொழிற்சாலை கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றது:

1. சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்ட்—மாதமொன்றிற்கு 9,000 டன்.

2. போர்ட்லாண்ட் பொசலோனோ சிமெண்ட்—மாத மொன்றிற்கு—40,000 டன்.

3. கடும்பதமான செங்கல் (Clinkers)—மாதமொன்றிற்கு 41,250 டன்.

இத்தொழிற்சாலையில் கீழ்க்கண்ட மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. சுண்ணாம்புக்கல்—நாளொன்றிற்கு 2,500 டன்.

2. ஜிப்சம்—நாளொன்றுக்கு 65 டன்.

3. தாது இரும்பு—20 டன் நாளொன்றிற்கு.

4. சுட்ட பொசலோனோ களிமண்—மாதத்திற்கு—200 டன்.

5. கரி—நாளொன்றுக்கு—400 டன்.

இத் தொழிற்சாலையில் கீழ்க்கண்ட தேவைக்கு நீர் பயன் படுத்தப்படுகின்றன:

1. தொழிலாளர்களின் அன்றாடத் தேவை—நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர்.

2. செய்முறை—நாளொன்றிற்கு 2,000 கிலோ லிட்டர்.

இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றிற்கு 75 கிலோ லிட்டர் வடிகால் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. செயல் முறைக் கழிவுநீர் செயல்முறைக்கே பயன்படுத்தப் படுகின்றது.

சுண்ணாம்புக்கல் உடைக்கப்பட்டு நீருடன் கலக்கப்பட்டு அரை நீர்மக் கலவையாக்கப்படுகிறது. இரும்புத் தாது மற்றும் பாக்சைட் அரை நீர்மக்கலவையுடன் கலக்கப்பட்டு ஒத்திருக்கின்ற அரை நீர்மக் கலவையாக்கப்பட்டு சுழலும் அடுப்பில் சூடேற்றப் பட்டு கடும்பதமான கிளிங்க்கர் பெறப்படுகின்றது. இவை குளிர வைககப்பட்டு ஜிப்சம் சேர்த்து சிமெண்ட் ஆலையில் அரைக்கப் பட்டு சிமெண்ட் பெறப்படுகிறது.

இத் தொழிற்சாலையில் கீழ்க்கண்ட பகுதிகள் உள்ளன.

1992 ஏப்ரல் 2] [திரு. சு. முத்துசாமி]

1. சுண்ணாம்புக்கல் உடைக்கும் பகுதி
2. அரைக்கும் பகுதி.
3. சுண்ணாம்புக்கல் முழுமையாக்கும் பகுதி.
4. இரும்புத்தாது அரைக்கும் பகுதி.
5. கரியை துகல்களாக்கும் பகுதி.—3 நெ.
6. சுழலும் அடுப்பு—5 நெ.
7. சிமெண்ட் ஆலை—5 நெ.
8. மூட்டைக் கட்டும் பகுதி —3 நெ.

இத்தொழிற்சாலையில் முன்பு சுழலும் அடுப்பிலிருந்து வரும் தூசியைக் கட்டுப்படுத்த சங்கிலிமுறை பயன்படுத்தப்பட்டது. சிமெண்ட் மற்றும் மூட்டை கட்டும் பகுதியில் தூசியினைக் கட்டுப்படுத்த துணியினால் ஆன வடிப்பான் பொருத்தப் பட்டிருந்தது. அதனால் காற்று மாசுபடுதல் குறித்து நிறைய புகார்கள் வந்தவண்ணமிருந்தன.

தற்பொழுது இவ்வாலை நவீனமாக்கம் மற்றும் விரிவாக்கத் திற்காக ரூ. 47 கோடி செலவில் புதிய சுழலும் அடுப்பு மற்றும் நவீன மாசு தடுப்பு சாதனங்களைப் பொருத்தியுள்ளது. பழைய ஐந்து சுழலும் அடுப்புகளில் மூன்று அடுப்புகள் இடிக்கப்பட்டு மீதமுள்ள இரண்டு மட்டுமே செயலில் உள்ளன அவற்றில் ஒரு பழைய சுழலும் அடுப்பிற்கு எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் என்று தூசிகட்டுப்படுத்தும் சாதனத்தைப் பொருத்தி இயக்கி வருகின்றது. மற்றொரு சுழலும் அடுப்பு இயக்கப்படுவதில்லை.

இத்தொழிற்சாலை நவீனமாக்கும் மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் கீழ்க்கண்ட தூசி கட்டுப்பாடு சாதனங்களை பொருத்தவுள்ளது.

1. புதிய சுழலும் அடுப்பு, கரி அரைக்கும் ஆலை மற்றும் பழைய சுழலும் அடுப்பு ஆகியவற்றிற்கு தனித்தனியே எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் பொருத்தியுள்ளது.

2. சிமெண்ட் ஆலைக்கு துணியால் ஆன வடிப்பானோடு கூடிய தூசு சேகரிப்பான் 7 நெம்பர்.

3. சிமெண்ட் மூட்டைக்கட்டும் பகுதியில் தூசு சேகரிப்பான் —3நெ.

4. புதிய சுழலும் அடுப்பு குளிரூட்டும் பகுதிக்கு தூசு பிரிப்பான் பொருத்தியுள்ளது. இப்பகுதிக்கு எலக்ட்ரோ ஸ்டேட்டிக் பிரிசிபிடேட்டர் பொருத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நவீனமாக்கப்பட்ட தொழிற்சாலையில் இயக்கத்திலுள்ள சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலை, அரைக்கும் ஆலை சுண்ணாம்புக்கல் மேம்பாடு அடையும் பகுதி இரும்புத்தாது

அரைக்கும் பகுதி, சிமெண்ட் ஆலை மற்றும் மூட்டை கட்டும் பகுதிகளோடு வடிக்கும் பகுதி உலர்த்தும் பகுதி. பைரோ செய்முறைப் பகுதி, கரி அரைக்கும் பகுதி மற்றும் சுழல் அடுப்பு ஆகியவை பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

இத்தொழிற்சாலை காற்று மாசு தடுப்பு சாதனத்தினைத் தொடர்ந்து நல்ல முறையில் இயக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தனது ஒப்புதலை 31-3-1992 வரை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இத்தொழிற்சாலையினை முனைப்பாக கண்காணித்து வருகின்றது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பத்தூர் மதுக்கரை சிமெண்ட் தொழிற்சாலையின் வெண்புகை மண் கரிப்புகையால் அந்தப் பகுதியில் வாழும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வெண்புகை மண் குடிநீரில் கலந்தும், வீடுகளின் உட்புறம்புகுந்தும், எல்லாப் பொருள்களையும் வெள்ளைக் கலராக்கிவிடுகிறது. உணவுப் பொருட்கள் அனைத்தும் கெட்டு விடுகின்றன. சுற்றுப்புறமுள்ள விவசாயிகளின் விவசாய விளைச்சல் பயிர்களில் குருத்துப் பகுதியில் இந்த சிமெண்ட் வெண் புகை மண் விழுந்து பயிர் வளராமல் பாதித்து, விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள். குடிநீரில் கலந்து, இந்தப் பகுதி மக்கள் நோய்க்கு உள்ளாகிறார்கள். ஆதலால் அரசு மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலம் சுகாதார வசதிகள் செய்து கொடுத்து அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இந்த நிலை இருந்திருக்கிறது. இப்போது அந்த ஆலை நவீனப்படுத்தப்பட்டு இருக்கிறதென்று எனக்கு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாசுக் கட்டுபாட்டு வாரியத்தின் மூலமாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தொடர்ந்து இது போன்ற தவறுகளை அந்த ஆலை செய்யுமானால், அங்கே இந்தக் குறைப்பாடு இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மேற்கொள்ளும்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 31.3,1992 வரை நிபந்தனை விதித்து, நவீனப்படுத்த அரசு ஆணை பிறப்பித்ததாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்துள்ளார்கள் அந்தத் தேதி முடிந்துவிட்டது இன்னும் அந்த ஆலையின்

1992 ஏப்ரல் 2] (திரு. கே. செல்வராஜ்)

2 பகுதிகள் நவீனப்படுத்தாமல், அந்தப் புகை வந்து கொண்டே இருக்கின்றது. எனவே இந்த நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு உடனடியாக அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி புகை வராமல் தடுக்கவும், இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் ஆவன செய்ய இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேதிக்கு முன்னாலே பதில் சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தொடர்ந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே இதே நிலை நீடிக்குமானால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அந்த ஆலை மீது உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி. என். எச். 130—விசைத்தறித் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் டி. என். எச். 130 விசைத்தறித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்காதது, "குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு இ. மதுசூதனன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

விவர அறிக்கை

திருநெல்வேலி சரகத்திலுள்ள டி.என்.எச். 130 வீரவநல்லூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு திங்கள் தோறும் 7-ம் தேதி சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதே போன்று இத்திங்களிலும் பிப்ரவரி 1992 திங்களுக்கான ஊதியம் ' மார்ச்